

தமிழ்நாடு சட்டப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2009–2011)

(பதின்மூன்றாவது பேரவை)

பதினொன்றாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 8 FEB 2011)

சட்டப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 002.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2009--2011)

(பதின்மூன்றாவது பேரவை)

பதினொன்றாவது அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

			பக்கம்
1.	2009–2011 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு	..	iii
2.	முகவுரை	..	v
3.	அறிக்கை	..	vii

இணைப்பு–1

1.	"தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின்" 2006–2007 ஆம் ஆண்டுக்கான முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுக்கான முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை பேரவைமுன் வைக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீனளத் துறை செயலாளர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை	..	1–2
2.	"தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்" 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் பேரவைமுன் வைக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை	..	3–4

இணைப்பு–2

1.	பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	..	5


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை

பதின்மூன்றாவது பேரவை

2009–2011 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு

(2009–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டது)

தலைவர்

திரு. பெ.சு. விஜயகுமார்

உறுப்பினர்கள்

திரு. என். மாலைராஜா
திரு. அ. சின்னசாமி
திரு. எஸ்.எஸ். குருசாமி
திரு. என்.கே.ஆர். சூரியகுமார்
திரு. செ. பொன்னுதுரை
திருமதி. எஸ். தேன்மொழி
டாக்டர் (திருமதி) கே.காயத்ரி தேவி
திரு. வீ.ஏ.டி. கலியவரதன்
திரு. தி.க. ராஜா
திரு. வே. மாரிமுத்து

சட்டப் பேரவைச் செயலகம்

திரு. மா. செல்வராஜ்	:	செயலாளர்
திருமதி கி. இந்திரா	:	இணைச் செயலாளர்
திரு. பா. அன்பழகன்	:	துணைச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முகவுரை

தமிழ்நாடு சட்டப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, பொதுத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 2006–2007 மற்றும் 2007–2008–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 2006–2007, 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் குறித்து 27.09.2010 அன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆய்வு செய்தது. இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மேற்காணும் அறிக்கைகள் காலதாமதமாக பேரவைக்கு அளிக்கப்பட்டது குறித்து விளக்கமளித்தனர். அரசுத் துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் குழு முன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பதினொன்றாவது அறிக்கையை (2009–2011) குழுவின் தலைவராகிய நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டறிக்கைகள் மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தணிக்கை அறிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் அளித்த விளக்கத்தின் மீதான இவ்வறிக்கைக்கு 7.01.2011 அன்று குழு தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது.

3. குழுவின் பணிகளுக்குப் பெரிதும் உதவிய சட்டப்பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை–600 002,
7.01.2011,
மார்கழி–23
திருவள்ளுவராண்டு–2041.

பெ.சு. விஜயகுமார்
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

தமிழ்நாடு சட்டப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2009–2011) 27.09.2010 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில், தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டறிக்கைகள் மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தணிக்கை அறிக்கைகள் கால தாமதமாகப் பேரவைக்கு அளிக்கப்பட்டமை குறித்து முறையே கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பதினொன்றாவது அறிக்கை.

சென்னை–600 002,
7.01.2011,
மார்கழி–23
திருவள்ளுவராண்டு–2041.

பெ.சு. விஜயகுமார்
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 1

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழக ஆண்டறிக்கைகள் தொடர்பாக கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீனளத் துறை செயலாளர் அளித்துள்ள பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்	2006–2007	31.03.2008	13.11.2008	34 வது அறிக்கை: 7 மாதம் 12 நாட்கள்
	2007–2008	31.03.2009	25.06.2009	35 வது அறிக்கை: 2 மாதம் 24 நாட்கள்

துறையின் பதில்

(6)

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தைப் பொறுத்தவரையில் 29.12.2000 முதற்கொண்டே நிறுவனத்தின் எல்லா பணிகளும் நிறுத்தப்பட்டு தற்போது மூடப்படும் தருவாயில் உள்ளது என்றும் நிறுவனம் மூடப்படவிருப்பதால் கணக்குகளை 2005–2006–ல் காலதாமதமாக கொடுத்தார்கள் எனவும், அடுத்தடுத்து ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் எடுக்கும்பொழுது தாமதம் ஏற்பட்டது என்றும் துறைச் செயலாளர் தெரிவித்தார்.

துறையின் பதில் தொடர்ச்சி
(6)

குறித்த காலத்திற்குள் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்காதது தவறுதான் என்பதை ஒப்புக் கொள்வதாகவும் இக்கால தாமதத்தைப் பொறுத்தருளுமாறும் அடுத்து வரும் ஆண்டுகளின் கணக்குகளை உடனடியாக முடித்து குறிப்பிட்ட காலத்திற்குள் அறிக்கைகளை அளிக்க இருப்பதாகவும் துறைச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

குழுவின் கருத்துரை
(7)

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளை பேரவைக்கு அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் குறித்து துறைச் செயலாளர் அளித்த விளக்கத்தினை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது. மேலும், இனி வரும் காலங்களில் இதுபோன்ற காலதாமதங்கள் இல்லாமல் ஆண்டறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பட வேண்டும் எனவும் தவிர்க்க இயலாத நேர்வுகளில் காலதாமதத்திற்கான அறிக்கைக்கு துறை அமைச்சரின் ஒப்புதல் பெற்று அதன் நகலை ஆண்டறிக்கையுடன் இணைத்து பேரவைக்கு அளிக்கப்பட வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தணிக்கை அறிக்கைகள் குறித்து வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அளித்த பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்	2006–2007	31.03.2008	11.01.2010	1 வருடம் 9 மாதம் 10 நாட்கள்
	2007–2008	31.03.2009	11.01.2010	9 மாதம் 10 நாட்கள்

துறையின் பதில்

(6)

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 2006–2007 மற்றும் 2007–2008 ஆகிய ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் நிர்வாகக் காரணங்களால் காலதாமதம் ஆகியுள்ளது என்றும் துறையிலிருந்து அரசுக்கும், அரசிடமிருந்து விளக்கங்கள் கேட்டு துறைக்கும் கடிதப் போக்குவரத்து ஏற்பட்டதில் காலதாமதம் ஆகியுள்ளது எனவும் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் தெரிவித்தார்.

2006–2007 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை 29.10.2007 அன்று இன்டர்னல் ஆடிட்டரிடமிருந்து தணிக்கை செய்து பெறப்பட்டு, 12.11.2007 அன்று பொதுக் குழுவில் ஒப்புதல் பெறப்பட்டது எனவும்,

துறையின் பதில் தொடர்ச்சி	குழுவின் கருத்துரை
(6)	(7)
14.11.2007 அன்று அரசுக்கு அனுப்பியபோது அரசு அதன் தமிழாக்க அறிக்கையை கேட்டதால் அதைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டதாகவும் அதன் பிறகு அந்த தமிழாக்க அறிக்கையின் 350 நகல்கள் வேண்டும் என்று அரசிடமிருந்து கேட்கப்பட்டதால் அதைப் பிரசுரம் செய்ய அனுப்பியதாலும் பிரிண்டிங் பிரஸ் இயங்காமல் இருந்ததாலும் காலதாமதம் ஏற்பட்டது எனவும் அவர் தெரிவித்தார். மேலும், காலதாமதத்திற்கான விளக்க அறிக்கையையும் அவையில் வைக்க வேண்டும் என்றும் அதற்கு 350 நகல்கள் வேண்டுமென்றும் அரசிடமிருந்து கோரப்பட்டதால் அதுசம்பந்தமாக பிரசுரம் செய்து அனுப்புவதிலும் காலதாமதம் ஆயிற்று எனவும் மேலாண்மை இயக்குநர் குழுவிடம் தெரிவித்தார்.	தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகளை பேரவைக்கு அளிப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. 2007–2008 ஆம் ஆண்டுக்கான அறிக்கையுடன் துறை அமைச்சர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்ட காலதாமதத்திற்கான விளக்க அறிக்கை இணைக்கப்படவில்லை. எனவே, இனி வருங்காலங்களில் ஆண்டறிக்கைகள், குறித்த காலத்திற்குள் தவறாமல் பேரவையில் வைக்கப்படவேண்டும் எனவும், அவ்வாறு இல்லாமல் காலதாமதம் ஏற்படும் நேர்வில் காலதாமதம் குறித்து துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அது குறித்த விளக்கத்தின் நகலை ஆண்டறிக்கைகளுடன் இணைத்து பேரவைக்கு அளிக்கப்படவேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது.
2007–2008 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைப் பொறுத்தவரையில் 29.10.2008 அன்று இன்டர்னல் ஆடிட்டரிடமிருந்து ரிப்போர்ட் வாங்கப்பட்டு 24.11.2008 அன்று போர்டில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டு 31.12.2008 அன்று அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் போர்டிலிருந்து துறைக்கும், துறையிலிருந்து அரசுக்கும் தகவல் பரிமாற்றம் செய்ததில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது எனவும், இனி வருங்காலங்களில் இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.	

இணைப்பு–2

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

28.08.2009	சென்னை
29.10.2009 மற்றும் 30.10.2009	நீலகிரி (உதகமண்டலம்)
08.01.2010	சென்னை
26.01.2010 முதல் 04.02.2010 வரை	வட இந்திய மாநிலங்கள்
07.06.2010	சென்னை
27.09.2010	சென்னை

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS